REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ✠ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: மார்கழி 14உ வெள்ளி (28—12—56) ★ ★ வெளியூர்: மார்கழி 15உ சனி (29—12—56) [இதழ் 173

16,600 பேர் பயிற்சி பெற்று விட்டனராம்!

16,600 பேர் அம்பர் சர்க்காவில் நூல் நூற்கக் கற்றுக் கொண்டு விட்டார்களாம்! ஒவ்வொருவரும் தினம் ஆறு சிட்டம் நூல் நூற்கவேண்டும் என்ற நிபந்தனையுடன், அவர்கள் அனைவருக்கும் அம்பர் இராட்டைகள் வழங்கப்பட்டு விட்டனவாம்!

இவர்கள் அனைவரும் நாடெங்கிலுமுள்ள 'பரிசிரமாலயங்'களில் பயிற்சி பெற்றனராம்! கடந்த செப்டம்பர் திங்களில் துவங்கப்பட்ட இந்த 248 ஆலயங்களில், இப்போது 40,000 பேர்வரை பயிற்சி பெற்று வருகின்றனராம்!

'ஆசிய ஜோதி' மீது 'காஷ்மீர் சிங்கம்' பாய்கிறது

'காஷ்மீர் மக்கள் அடிப்படை உரிமையை எவரும் மறுத்துவிட முடியாது'

'வாக்கெடுப்பு நடத்துவோம் என்று கூறிய உறுதிமொழி என்ன ஆயிற்று?'

'பண்டித நேருவின் பேச்சு உலக சமாதானத்திற்கு ஆபத்து விளைவிக்கும்'

அரசியல் சபை தலைவருக்கு ஷேக் அப்துல்லா கடிதம்

ஸ்ரீநகர், டிச. 27—

'பாகிஸ்தானுக்கு அமெரிக்கா இராணுவ உதவி அளித்திருப்பதானது காஷ்மீர் சிக்கலின் நிலையை உருமாற்றியிருக்கிறது—என்று பண்டித நேரு கூறியிருப்பது தவறானது' என்று சிறையில் வாடும் ஷேக் அப்துல்லா, காஷ்மீர் அரசியல் நிர்ணய சபைத் தலைவருக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டிருப்பதாக சபைத் தலைவர் ஜி. எம். சதீக் கூறியிருக்கிறார்.

கடிதம், பத்திரிகையாளருக்கு வாசித்துக் காட்டப்பட்டதாம்.

அதில் காணப்படுவதாவது:—

"வேறு ஒரு நாடு, இந்தியாவிற்குப் பிடித்தமில்லாத ஏதோ ஒரு காரியத்தைச் செய்துவிட்ட காரணத்தால், கடந்த கால் நூற்றாண்டுக் காலமாகத் தங்கள் தலைவிதியைத் தாங்களே நிர்ணயித்துக் கொள்ளும் சுதந்திரத்திற்காகப் போராடி வந்துள்ள காஷ்மீர் மக்களுக்கு, எவரேனும் ஒருவர், அவர்களது அடிப்படை உரிமையைத் தரமுடியாது என்று கூறுவதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

"பண்டித நேரு மக்கள் சபையில் அறிக்கை தந்துவிட்டதினாலேயே, 'காஷ்மீரில் வாக்கெடுப்பு நடத்துவோம்' என்று இந்தியா சர்வதேசங்களின் முன்னிலையில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்ட நிலை இப்போது அற்றுவிட்டது என்று சபைத் தலைவர் சதீக் கருதுவது தவறு.

"சர்வதேச அமைதிக்கும் சமாதானத்திற்கும் பெரும் ஆபத்து விளைவிக்காமல், இந்தியா, தான் முன்பு கூறியதை தன்னிச்சையாக இப்போது மறுத்துவிட முடியாது."

'ஆகட்டும் பார்க்கலாம்' என்ற நிலை கூடாது!

ஏழை எளியோரை மறந்த காங்கிரசார் அதன் பலனை விரைவிலேயே அனுபவிப்பர்

வியாபாரிகள் கூட்டத்தில் என். வி. என். எச்சரிக்கை

"இன்று இந்த நாட்டில் காங்கிரஸ் கட்சி ஆட்சியிலிருப்பதற்கு முக்கியக் காரணமாக இருந்தவர்கள் தொழிலாளர்கள், பாட்டாளிகள், வியாபாரிகள், ஏழைகள் என்பதை இந்தக் காங்கிரஸ் அரசாங்கம் மறந்துவிடக் கூடாது. இதை மறந்தால், நன்மைக்குப் பிரதிநன்மை செய்யும் எண்ணம் இல்லாவிட்டாலும்கூட, அவர்களுக்குக் கொடுமையும் இந்த சர்க்கார் செய்தால், அதன் பலனை வெகு விரைவிலேயே அவர்கள் அனுபவிப்பார்கள்.

"வியாபாரிகளின் இந்தக் குறைந்தபட்சக் கோரிக்கைகளை—சாதாரண உரிமைகளைக்கூட இந்த சர்க்கார் செவிசாய்த்துக் கேட்க மனந்துணியவில்லை; அவர்களுக்கு அநீதி செய்துவருகிறது.

"திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய நாங்கள் எங்களுடைய பல கூட்டங்களிலும், மாநாடுகளிலும் வியாபாரிகளின் குறைகளை எடுத்துக் கூறியிருக்கிறோம்; அவற்றைநீக்க சர்க்காரை கேட்டுக்கொண்டோம்; என்றாலும், பயனில்லை. இப்போதோ, வியாபாரிகளே ஒன்று திரண்டு, தங்களுடைய கோரிக்கைகளையெல்லாம் சர்க்கார் ஏற்காவிட்டால், அவர்களுக்கு ஒரு மாதத் தவணையும் கொடுத்து, அதற்குள் தகுந்த நடவடிக்கை எடுக்காவிட்டால் போராட்டம் நடத்துவோம் என்று எச்சரிக்கும் வகையில் தங்கள் கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். வியாபாரிகளினுடைய இந்த இயக்கத்திற்குத் திராவிட முன்னேற்றக் கழகம் தனது முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் தரும் என்பதைக் கூறிக்கொள்வேன்.

—என்று, தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், நேற்று மாலை 6 மணியளவில், சென்னை—பெரம்பூர், பென்ஷனர் லேன் திடலில் (ஜி-8 போலீஸ் நிலையம் அருகில்) சென்னை சில்லறை வியாபாரிகள் சங்கச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டார்.

'சென்னை சர்க்கார், வியாபாரிகளின் இந்தப் பிரச்சினையையாவது கொஞ்சம் மனிதாபிமானத்துடன்—நல்ல புத்தியுடன் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்றெல்லாவற்றிற்கும் சொல்வதைப்போல், 'பார்க்கலாம்' என்று கூறி வீண் பிரச்சினைகளில் கவனஞ்செலுத்தாமல்—கிளர்ச்சிக்கு வழியில்லாமல் சமாதான முறையில் வேண்டுகோளை நிறைவேற்றித்தர காமராசர் சர்க்கார் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை அலட்சியப்படுத்தி 'ஆகட்டும்—பார்க்கலாம்' என்று காமராசர் கூறுவாரானால், வருகிற பொதுத் தேர்தலில் அவர்களைச் சந்தித்து அவர்களிடம் ஓட்டுக் கேட்கும் போது, அவர்களும் 'பார்க்கலாம்' என்றுதான் பதில் கூறுவார்கள் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

(பேச்சு முடியவில்லை; தொடர்ந்துவெளிவரும்)

நம் நாட்டு நிலை நேருவுக்கு எப்படித் தெரியும்?

'ஒற்றுமை' என்பதற்காக நான்கு பேர் ஒரே துணியைக் கட்டிக்கொள்ள முடியுமா?

'அகில இந்தியா'க்கள் செய்யும் முதல் பெரிய தவறு!

சென்னைக் கூட்டத்தில் அண்ணா முழக்கம்

"நமக்கென்று ஒரு துரைத்தனம் வேண்டும்; அது நம்முடைய துரைத்தனமாக இருக்கவேண்டும்; அப்போதுதான் அந்தத் துரைத்தனம், நமது மக்களின் நலன்களைக் கவனிக்கமுடியும்.

"நம்முடைய நாட்டு நிலைகள் நேருவுக்கு எப்படித் தெரிய முடியும்? கங்கையைக்கண்ட நேருவின் கண்களுக்கு, நமது பாலாற்றைப் பார்க்கும்போது 'இது என்ன ஆறு, வாய்க்காலா?' என்று நினைக்கத்தான் தோன்றும்.

"அழகப்ப செட்டியாரிடம் போய், பசித்த ஒருவன், 'கொஞ்சம் பழஞ்சோறு தாருங்கள்,' என்று கேட்டால், அவர் என்ன சொல்லுவார்?

"அதனால்தான், நாம் கூறுகிறோம்—'நேரு போன்ற அத்தனை பெரியவர்கள் இந்த நாட்டுக்குத் தலைவர்களாக வேண்டாம்' என்று!

"இந்த நாட்டிற்கு ஒரு துரைத்தனம்—நமக்கென்ற ஒரு துரைத்தனம் வேண்டும் என்பது, வீட்டுக்குச் சுற்றுச் சுவரும், கடைக்கு ஒரு கதவும் பூட்டும் வேண்டுமென்பதைப் போன்றதே!

"நாம் இப்படிச் சொல்லும்போது, 'இவர்கள் ஒற்றுமையைக் குலைக்கிறார்கள்;' என்று சிலர் கூறுகிறார்கள்.

"அண்ணன் தம்பிமார் நால்வர் இருந்தால், 'அவர்கள் ஒற்றுமையாயிருக்கிறார்கள்' என்று காட்டுவதற்கு 16 முழம் துணியை நான்குபேரும் சேர்த்துக் கட்டிக்கொள்வதுதான்,' என்று கூறுவதைப் போலத்தான், 'இந்தியாவில் அனைவரும் ஒற்றுமையாயிருக்கிறார்கள் என்பதற்கு இந்தியா முழுமைக்கும் ஒரே ஆட்சி வேண்டும்,' என்பதுமாகும்.

"நாம் கூறுவதெல்லாம், '16 முழம் துணியை 4 முழத் துண்டுகளாக ஆக்கி, நான்கு பேரும் கட்டிக்கொள்வதால், ஒற்றுமை என்ற ஒன்று இல்லாமற் போய் விடாது,' என்பதுதான்!

"இமயம் முதல் குமரி வரை ஒரே நாடுதான் இந்தியா—என்று பேசுகிறவர்கள் செய்யும் முதல் தவறே அதுதான்! இந்தியா ஒரே நாடு அல்ல; அது ஒரே நாடாக இருந்ததும் இல்லை.

"அவுரங்கசீப் கூடத்தான், 'டில்லி ராஜ்யம் போதாது,' என்று தட்சிணபீட பூமியை வென்று, கர்நாடகத்தைத் தோற்கடித்து பெரியதொரு சாம்ராஜ்யம் அமைக்கவேண்டும் என்று ஆசைப்பட்டான்.

"ஆசைக்கு அளவேது? அப்படி ஆசைப்பட்டவர்கள் எவராலும் ஒரே இந்திய சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்க முடியவில்லையே! வடநாட்டு மன்னாதி மன்னர்கள் எல்லாம் தங்கள் ராஜ்யம் பெரிது ஆக ஆக, அது கையில் தங்காமற் போனதைத்தானே கண்டார்கள்?

"இந்த நிலைமைகளை இன்னும் கூட உலக அரசியல் அரங்கில் நாம் காண்கிறோமே! காங்கிரசார் ஏன் அவற்றை எல்லாம் எண்ணிப் பார்க்க மறுக்கிறார்கள்? ஏன் நாம் திராவிட நாடு கேட்பது கூடாது என்கிறார்கள்?

இந்தோனேஷியாவில்

"இந்தோனேஷியாவில் வடக்கு சுமத்ரா என்ற நாட்டில் திடீர் என்று புரட்சி; அந்த நாட்டைக் கைப்பற்றிக் கொண்ட இராணுவத் தலைவன், 'இனி நான் இந்தோனேஷியாவின் சுகர்ணோ சர்க்காருக்குக் கட்டுப்பட மாட்டேன்; இனி இந்த நாட்டில் தனிக்கொடி பறக்க விடப்படும்—தனியாட்சி தான் நடைபெறும்' என்று பிரகடனப்படுத்தியிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது.

"இப்படித் திடீரென்று புரட்சியில் ஈடுபடுவதற்கு முன் அவர்களும் கூட்டம் கூட்டி, மாநாடு நடத்தி, தீர்மானம் நிறைவேற்றித் தங்கள் கோரிக்கையை வற்புறுத்தியிருக்கின்றனர்; ஆனால், சுகர்ணோ சர்க்காருக்கு அது புரியவில்லை! இப்போது வடக்கு சுமத்திராவில் ஏற்பட்டுள்ள புரட்சி பாஷைதான் புரிகிறது போலும்!

"இதுபோன்ற புரட்சி இந்த நாட்டில் — தென்னாட்டில் நடக்காது என்பதற்கு என்ன உறுதி? வேண்டுமானால் நான், 'அதுபோன்ற புரட்சி வேண்டாம்' என்பேன்; நமது பொதுச்செயலாளரும் வேண்டாம என்று கூறுவார்; ஆனால், மக்கள் அனைவரும், எங்களுக்கு மட்டுமே கட்டுப்பட்டவர்கள் அல்லவே! தங்களின் விடுதலை வேட்கையால் கிளர்ந்தெழுந்து புரட்சியில் ஈடுபட மாட்டார்கள் என்பதற்கு என்ன அத்தாட்சி இருக்கிறது? மக்கள் இப்போது பேசுகிற பாஷை ஆட்சியாளருக்குத் தெரியாவிட்டால், சர்க்காருக்குப் புரிகிற பாஷையில்தானே பேச முற்படுவார்கள்?

என்று, அண்ணா அவர்கள் 23—12—56ல், பூங்காநகர் தி. மு. கழகக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்கள்.

தமிழ் ஆட்சிமொழி மசோதா

சட்ட சபையில் ஆரவாரத்துடன் வரவேற்பு

சென்னை, டிச. 27—

தமிழ் நாட்டில், தமிழ்மொழியை ஆட்சி மொழியாக்கும் மசோதா, இன்று சட்டசபையில், நிதியமைச்சர் சுப்பிரமணியம் அவர்களால் கொண்டுவரப்பட்டது.

உறுப்பினர் அனைவரும் கட்சி வித்தியாசம் பாராமல், பெருமிழ்ச்சியோடு ஆரவாரம் செய்து, மசோதாவினை ஆதரித்தனர்.

சர்க்கார் தீர்மானத்தின் மறு

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 28—12—'56 வெள்ளி

தோழர்களே! விரைவீர்!

பொதுத் தேர்தலுக்கான தேதிகள் அறிவிக்கப்பட்டு விட்டன; '1957-ம் ஆண்டு பிப்ரவரி 25-ந் தேதிமுதல் மார்ச் 10-ந் தேதிக்குள் இந்தியத் துணைக் கண்டமெங்கும் பொதுத் தேர்தல்கள் நடைபெற்று முடிந்துவிடும்,' என்று டில்லிப் பெரியவர்கள் பறைசாற்றிவிட்டனர்.

இந்தியாவெங்கணும்ஆட்சிப் பொறுப்பிலிருந்துவரும் காங்கிரஸ் கட்சி, தேர்தலில் ஈடுபடுவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் வெகு மும்முரமாகச் செய்து வருவதைக் காண்கிறோம்.

இந்தியத் துணைக் கண்டத்தின் இதர மாநிலங்களைவிடத் தென்னாட்டு மாநிலங்களில் பொதுவாகவும் — குறிப்பாகத் தமிழ் நாட்டிலும், காங்கிரசுக்கு வரப்போகும் பொதுத் தேர்தலில் மிக சக்திவாய்ந்த எதிர்ப்புகள் தோன்றியிருக்கின்றன என்பதை உணர்ந்துள்ள காங்கிரஸ் மேலிடம், தமிழ் நாட்டில் காங்கிரசையே மீண்டும் எப்படியேனும் பதவிக்குக் கொண்டுவந்துவிட வேண்டும் என்ற நோக்கத்துடன், தமிழ் நாட்டின்மீது விசேடமான கவனம் செலுத்தி வருவதாக சென்னை அரசியல் வட்டாரங்களிலிருந்து தகவல் கிடைக்கிறது.

காங்கிரசைத் தவிர இதர கட்சிகளும், தேர்தல் வேலைகளிலேயே தங்கள் முழு கவனத்தையும் திருப்பியிருப்பதும் அனைவரும் அறிந்த ஒன்றே!

தமிழ் நாட்டில், தேர்தலின் போது ஆளும் கட்சியான காங்கிரஸ் சந்திக்கப் போகும் மகத்தான எதிர்ப்புச் சக்தி திராவிட முன்னேற்றக் கழகம் தான் என்ற கருத்தில், அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தமிழ் நாட்டுத் தொண்டர்கள், தங்கள் வடநாட்டு 'எஜமானர்'களை வருந்தி அழைத்து வந்து தேர்தல் பிரச்சாரத்தைத் துவக்கி விட்டிருக்கின்றனர்; பண்டித நேருவும் வரவிருக்கிறார் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம், ஜனநாயகம் காப்பாற்றப்படுவதற்காக, ஆளும் கட்சியின் எதேச்சாதிகாரப் போக்கினைத் தட்டிக் கேட்கவும் தடுத்து நிறுத்தவும், தகுதி வாய்ந்த ஒரு எதிர்க்கட்சி தேவை என்ற உண்மையைப் புரிந்து கொண்டிருப்பதால், வரப்போகும் பொதுத் தேர்தலில் காங்கிரசுக்கு எதிராக 150 தொகுதிகளில் போட்டியிடும் என்று அறிவித்துள்ளது.

அந்த அறிவிப்பிற்குப் பிறகு, கழகம் சுமக்க வேண்டியுள்ள இந்தப் புதிய பெரிய பொறுப்பினை எண்ணி, பொறுப்பை நிறைவேற்றத் தேவைப்படும் நிதியினைத் திரட்டுவதில் ஈடுபட்டிருக்கிறது.

காங்கிரசைப் பொறுத்த, அவர்களுக்குத் தேர்தலில் ஈடுபடுவதற்கென மக்களிடத்தில் சென்று நிதி திரட்டவேண்டிய அவசியம் இருக்கவில்லை. நாட்டில் உள்ள மிகப் பெரிய பணக்காரர்கள், பெரும் முதலாளிகள், வணிகர்கள், நிலப்பிரபுக்கள், மாஜி மன்னர்கள், குட்டிக் குபேரர்கள் எல்லாம் தஞ்சம் புகுந்துள்ள கூடாரமாக இருக்கும் காங்கிரஸ், தேர்தல் நிதிக்கென மக்களிடத்தில் சென்று நிதி திரட்டவேண்டிய அவசியமே இல்லை.

நாம் எந்த மக்களுக்காகத் தேர்தலில் ஈடுபடுகிறோமோ, அந்த மக்களிடமிருந்தே நாம் பணம் கேட்கிறோம்; நிதி திரட்டிக் கொண்டிருக்கிறோம். ஆனால் காங்கிரஸ், மக்களுக்குப் 'பணம்' தந்தே தேர்தலில் வெற்றி பெற்றுவிடலாம் என்று கருதுகிற நிலையிலிருக்கிறது.

நாம், 'மக்களே, பணம் தாருங்கள்': என்று கேட்கிறோம். அவர்கள், 'மக்களே, பணம் தருவோம்' என்று சொல்லாமல் சொல்லுகிறார்கள். இந்த வேறுபாட்டைப் புரிந்து கொள்வதைப் பொறுத்துத்தான், மக்களது விழிப்புணர்வை எவரும் அளவிட முடியும்.

தேர்தலின்போது காங்கிரஸ் கவலைப்படவேண்டாத ஒரு விஷயம், 'தேர்தல் செலவுகளுக்குப் பணம் தேவை' என்பதுதான். ஆனால் நாம், அதிகமாகக் கவலைப்பட வேண்டிய பிரச்சினையாயிருக்கிறது, அந்தப் 'பண' விஷயம்!

இன்றிலிருந்து கணக்கெடுத்தால் இன்னும் சரியாக அறுபது நாட்கள்கூட இல்லை, தேர்தலைச் சந்திப்பதற்கு!

அதற்கிடையில் வரும் இருபத்தொன்பதாம் தேதியன்று நமது கழக மத்திய செயற்குழுக் கூட்டமும், முப்பதாம் தேதியன்று பொதுக்குழுக் கூட்டமும் சேலம் நகரில் கூடவிருக்கின்றன.

தேர்தலில் ஈடுபடுவது என்ற பெரிய பொறுப்பினை கழகம் ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதையும், அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதில் தங்கள் ஒவ்வொருவருக்கும் மகத்தான பங்கு உண்டு என்பதையும் உணர்ந்துள்ள ஒவ்வொருவரும் —கழக உறுப்பினர்கள், கிளைக் கழக நிர்வாகிகள், செயலாளர்கள், மாவட்டக் கழக உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆகியோரும் — தலைமைக் கழகம் இடுகிற பணிகளைத் தீவிரமாகச் செயல்படுத்த வேண்டியதின் அவசியத்தையும் உணர்ந்தவர்களே! அந்த வகையில், செயற்குழு, பொதுக்குழுக் கூட்டங்கள் முடிந்தபின், நாம் மேற்கொள்ளவேண்டி இருக்கும் பணிகள், பலதரப்பட்டவை—ஏராளமானவை — பொறுப்பு மிக்கவை—சற்று சிரமமானவையும்கூட! எனவே, இப்போது நிதி வசூலில் ஈடுபட்டுள்ள கழகத் தோழர்கள், தலைமை நிலையம் விரும்பிக்கேட்டுள்ளபடி, வசூலான தொகையை அவ்வப்போது உடனுடக்குடன் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

மற்றும், கழகத் தோழர்கள் —கஷ்ட நஷ்டங்களைக் கண் கலங்காது ஏற்று அனுபவப்பட்டுள்ள கழகத் தோழர்கள் —உள்ள உறுதியும், தீரமும் வீரமும் பெற்றுள்ள கழகத் தோழர்கள்-தங்களையே இலட்சிய ஈடேற்றத்திற்கு, தாயக விடுதலைக்கு ஒப்படைத்துள்ள கழகத் தோழர்கள், நமது அண்ணா அவர்கள் ஒரு கூட்டத்தில் குறிப்பிட்டதுபோல், வரப்போகும் தேர்தல்காலத்தை — 'பக்தர்கள்' பாடினது போன்று—ஒரு 'சோதனைக் காலமா'கக் கருதி, தீவிரமாக, முன்னினும் அதிகமான ஆர்வத்தோடும் உறுதியோடும் கட்டுப்பாட்டுடனும் பாடுபட தங்களைத் தயாராக்கிக் கொள்ள வேண்டுகிறோம்.

அறுபதே நாட்கள்—சிறகடித்துப் பறந்துவிடும்! தோழர்கள் அனைவரும், செயற்குழு, பொதுக் குழு முடிவுகளைச் செயலாற்ற விரைய வேண்டும்.

'மன்னிக்க முடியாத குற்றங்கள்'

மாஜிஸ்திரேட்டுகளுக்கு உயர் நீதிமன்ற நீதிபதி யோசனை

திருவாரூர், டிச. 24—

"உணவுப் பொருள்களில் கலப்படம் செய்வதும், போலி நிறை அளவுகளைக்கொண்டு வியாபாரம் செய்வதும் மன்னிக்க முடியாத குற்றங்களாகும்; அப்படிச் செய்பவர்களை சமூகத் துரோகிகளென்றே கூறலாம்; சட்டப்படி அவர்களைக் கடுமையாகத் தண்டிக்கவேண்டும்; சிறிதேனும் இவர்களுக்கு மாஜிஸ்திரேட்டுகள் இரக்கம் காட்டக் கூடாது"

என்று, தஞ்சை மாவட்டத்தில் நடைபெற்ற மாஜிஸ்திரேட்டுகள் மாநாட்டில் தலைமை தாங்கிப் பேசுகையில் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி இராமசாமி கவுண்டர் வற்புறுத்தியுள்ளார்.

நெய்வேலித் திட்டம்

அமெரிக்க பூதத்துவ நிபுணர் உதவி கோரப்படுமாம்

தொழில் நுட்பப் பள்ளி நிறுவ உத்தேசம்?

புதுடில்லி, டிச. 26—

சமீபத்தில் உருவாக்கப்பட்ட நெய்வேலி திட்டக் கார்ப்பரேஷனின் முதல் கூட்டத்தில், திட்ட சம்பந்தமாக இனி மேற்கொள்ளப்பட வேண்டிய ஏற்பாடுகள் பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது.

பூமிக்குக் கீழிருக்கும் தண்ணீரின அழுத்தத்தைக் கட்டுப்படுத்தி பழுப்பு நிலக்கரியை வெளியே எடுப்பது சம்பந்தமாக ஒரு அமெரிக்கப் பூதத்துவ நிபுணரின் உதவி பெறப்படுமெனத் தெரிகிறது; இந் நிபுணர் சுமார் 6 மாத காலம் நெய்வேலியில் இருக்கக்கூடும்.

நெய்வேலியில் ஒரு தொழில் நுட்பப் பள்ளியும், ஆரம்பப் பள்ளியும் நிறுவ உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

ரஷ்யாவின் இராணுவ அதிகாரிகள் வருகை

இந்தியாவில் 18 நாட்கள் சுற்றுப் பயணம் செய்வர்

புதுடில்லி, டிச. 26—

ரஷ்ய இராணுவத்தைச் சேர்ந்த உயர்தர அதிகாரிகள் பலரும், ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சர் மார்ஷல் ஜுகாவும் இந்தியாவிற்கு வருகின்றனர்; இங்கு 18 - நாட்கள் சுற்றுப் பயணத்தில் ஈடுபடும் அவர்கள், பாதுகாப்பு நிலையங்களையும், மற்றத் துறைகளில் நாட்டின் முன்னேற்றத்தையும் பார்வையிடுவார்களாம்.

இந்தி பொது மொழியாவதற்கு சோஷலிஸ்டுக் கட்சிக்குள் எதிர்ப்பு

தேசிய மாநாட்டில் தீர்மானம் வருகிறது

"வடநாட்டு மொழி ஒன்று, தென்பகுதி மக்களுடைய கலாச்சாரத்திற்கு ஊறு செய்வதாகும் என்ற பீதி தமிழ்நாட்டில் வேரூன்றி விட்டது.

"தமிழ் மக்கள் விரும்பாத ஒன்றை அவர்கள் தலையில் சுமத்துவதென்பது அநியாயமாகும்.

"ஏற்கனவே ஆங்கிலம் வகித்துவந்த இடங்களை இந்தி ஆக்கிரமிக்கப்போவதால், பிரதேச மொழிகள் மட்டுமல்லாமல் மக்களின் கலாச்சாரமும் இழிநிலையை அடைந்துவிடும் என்பதில் சந்தேகத்திற்கிடமில்லை."

—இவ்வாறு, சோஷலிஸ்டுக் கட்சி தேசியக் கமிட்டி உறுப்பினர் எம். சின்னசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

"சோஷலிஸ்டுக் கட்சியின் தேசிய மாநாடு இன்னும் ஒரு வாரத்தில் நடைபெறப்போகிறது; மாநாடு விவாதிக்கப்போகிற பல பிரச்சினைகளில் நிர்வாக மொழிப் பிரச்சினையும் ஒன்றாகும்.

"தமிழ்நாட்டில் இந்தி மொழி பற்றி மக்களிடையே இருக்கும் கருத்துக்களை எந்த அகில இந்தியக் கட்சியும் சரியாக மதிப்பிட வேண்டும்; குறைத்துத் தவறாக மதிப்பிடுவதானது கட்சிகளுக்கு மட்டுமல்லாமல் தமிழ்நாட்டிற்கே ஆபத்தாக முடியும்.

"எல்லா அகில இந்தியக் கட்சிகளைப்போலவே, சோஷலிஸ்டுக் கட்சியும் தனது அகில இந்தியத் தன்மையின் காரணமாக, இந்தியே நாட்டின் நிர்வாக மொழியாக இருக்க வேண்டுமென்று கூறிவருகிறது. சோஷலிஸ்டுக் கட்சியின் சட்ட திட்டங்கள், கொள்கை, அறிக்கை ஆகிய எதிலும் இந்தி சம்பந்தப்பட்ட அறிவிப்பு எதுவும் இல்லை. ஆனாலும், கட்சியின் முக்கிய தலைவர்கள் இந்திதான் அரசியல் மொழி என்று பேசத் தொடங்கிவிட்டனர்.

"நாட்டின் நலனில் அக்கரை கொண்டுள்ள—ஆனால் செயலற்றுப்போன அறிஞர்கள், இந்தி மொழி ஆதிக்கம் பெறுவதை கடுமையாக எதிர்க்கிறார்கள். இந்த எதிர்ப்புகளை அலட்சியம் செய்வதில் இந்திய சர்க்காருடன் எல்லா அகில இந்தியக் கட்சிகளும் ஒத்துப் போகின்றன.

"ஆங்கிலம் — முதலாளித்துவத்தின் மொழியெனவும், இந்தி— உழைக்கும் வர்க்கத்தின் மொழியெனவும் ஒரு புதுவாதம், முற்போக்கு எண்ணம் படைத்தவர்களால் கிளப்பப்பட்டிருக்கிறது. 10 சதவிகிதத்திற்கும் குறைவாகப் படித்த மக்களைக்கொண்ட உ. பி. போன்ற இந்தி பேசும் மக்களின் நிலையைப் பொறுத்தவரை மேற்கண்ட வாதம் நியாயமானதாகத் தோன்றலாம். இந்தி பேசும் மக்களுக்கு, ஆங்கிலம் முதலாளித்துவ மொழி என்பதை வாதத்திற்காக ஒப்புக் கொண்டாலும், இந்தி பேசாத மக்களுக்கு இந்தி முதலாளித்துவ மொழிதான் என்பதும் நிலைபெற்றுவிடுகிறது. இப்பொழுது அந்நிய மொழி என்கிற காரணத்தால் ஆங்கிலத்தை வெறுக்கிறோம். எனக்குரியவர்கள் உழைக்கும் வர்க்க அரசியலில்கூட முதலாளி மொழி—தொழிலாளி மொழி என்று பேச முற்பட்டிருப்பது நல்ல அறிகுறியாகும். ஏனென்றால், 3 கோடி தமிழ் நாட்டு உழைப்பாளி வர்க்கத்தின் மொழிப் பற்றையும், பிரதேசவாரி அபிலாஷைகளையும் தத்துவ ரீதியாக ஒப்புக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தை இந்தி ஆதரவாளர்களே ஏற்படுத்தியிருப்பது குறித்து நான் மிகவும் மகிழ்கிறேன். தமிழ் மக்களின் உண்மையான எண்ணத்தை, தத்துவ ரீதியாக விளக்குவதற்குக் கிடைத்திருக்கிற இந்த வாய்ப்பை தமிழ் நாட்டுப் பிரதிநிதிகள் நழுவ விடக்கூடாது என்பதே என் விருப்பமாகும்.

'தேசிய நலன்' என்பதன் பெயரால், 'பிரதேசவாரி' மக்களின் நலன்கள் அலட்சியப்படுத்தப்பட்டு வந்ததைத்தான், கடந்த 10 ஆண்டுகளில் பார்த்தோம். தேசம் என்பதே, வடக்கே இருக்கும் நிலப் பகுதிதான் என்று இந்தி பேசும் மக்கள் நினைக்கிறார்களோ என்ற சந்தேகம் தென்னாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

"இந்தி மொழியானது தமிழ் மொழியையும், தமிழ்ப் பண்பாட்டையும் அழித்துவிடும் என்கிற பயமானது நியாயமானதேயாகும்.

"இந்தி அறியாத மக்கள், தமிழ் மக்கள் இந்தியை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதற்காகத் தியாகம் செய்ய வேண்டுமென்று சிலர் கூறுகிறார்கள்; அதேபோல், இந்தி பேசுகிறவர்களும் அந்த அளவு தியாகம் செய்யுமாறு கேட்கப்படுவார்களா என்பதே இன்றுள்ள கேள்வி.

"தமிழ் நாட்டில் அகில இந்தியக் கட்சியின் கிளை என்பது, இந்தி பேசும் மக்களின் எண்ணத்தைத் தெற்கே புகுத்தும் பணியினையே செய்து வந்திருக்கிறது. இது, பொதுவாக, எல்லாக் கட்சிகளின் சரித்திரமும் அவ்வளவுதான். தென்னாட்டு மக்களின் உண்மை எண்ணங்களை மாநாட்டில் எடுத்துக் கூறுவதற்கான துணிவு சோஷலிஸ்டுக் கட்சிக்கும் இருக்க வேண்டும் என்பதே எனது விருப்பம்.

'இம்முறை, அகில இந்திய சோஷலிஸ்டுக் கட்சி மாநாட்டில் இந்திப் பிரச்சினை வரப்போகிறது. தமிழ் மக்களின் கருத்துக்கும் நலனுக்கும் விரோதமான முடிவு அந்த மாநாட்டில் ஏற்படும்படி நேர்ந்துவிடக் கூடாதே என்பதே என் வேண்டுகோளாகும்.

'தமிழ் நாட்டுப் பிரதிநிதிகள் தமிழ் நாடு சோஷலிஸ்டுக் கட்சியினர் ஆகியோர் இவ்விஷயத்தில் தாங்கள் ஆற்றவேண்டிய நியாயமான கடமை என்னவென்று சிந்தனைசெய்யவேண்டும்—நியாயமாக நடந்துகொள்ள வேண்டுமென்று தமிழ் மக்கள் எதிர்பார்ப்பதில் தவறில்லை.

'தமிழர்களின் மொழி, பண்பாட்டிற்கு விரோதமாக எந்த முயற்சியையும் முறியடிக்கும் சக்தி தமிழ் நிலத்திலிருந்து இன்னும் மறையவில்லை என்று நான் திடமாக நம்புகிறேன். அந்தச் சக்தி, சோஷலிஸ்டுக் கட்சியை — அதன் ஊழியர்களை சரியான முறையில் வழிகாட்டி அழைத்துச் செல்ல வேண்டும்"

பயிற்சி பெற்ற 'நர்சு'கள்

170 பேர் வேலையின்றித் தவிக்கின்றனராம்

சென்னை, டிச. 26—

'சுமார் 170 பயிற்சி பெற்ற 'நர்சு'கள் வேலை தேடி அலைகிறார்கள்' என்று மந்திரி மாணிக்கவேலர் சட்டசபையில் கூறியிருக்கிறார்.

இந்தக் கணக்கு 1956 நவம்பர் முதல் தேதி வரை உள்ளது என்றும், மாநிலத்தில் உள்ள எல்லா மருத்துவமனைகளிலும் தேவையான அளவு நர்சுகள் இருக்கின்றனர் என்றும், சில மருத்துவமனைகளில் கட்டிடங்கள் எழும்பாத காரணத்தால், அனுமதிக்கப்பட்டுள்ள எண்ணிக்கையைவிட சில இடங்கள் காலியாக இருக்கின்றன என்றும் மந்திரி கூறியிருக்கிறார்.

கீரம்பூர், துறையூர் கழக நிகழ்ச்சிகளில் தோழர் மு. கருணாநிதி

8-12-56 பகல் 11½ மணிக்கு, கீரம்பூர் உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியர் கே பிச்சுமணி தலைமையில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் தோழர் மு. கருணாநிதி 'தமிழ்—அன்றும் இன்றும்' எனுந்தலைப்பில் நீண்டதோர் உரை நிகழ்த்தினார். ஏராளமான மாணவ மாணவிகளும், பொது மக்களும் கலந்துகொண்டனர்.

திருவள்ளுவர் படிப்பகத் திறப்பு விழா

அன்று பகல் 1 மணிக்கு, கீரம்பூர் குறிச்சித் தெருவில் தோழர் சீனுவாசன் தலைமையில் நடைபெற்ற படிப்பகத் திறப்பு விழாக் கூட்டத்தில், தோழர் அம்பில் தர்மலிங்கம் திருவள்ளுவர் படத்தைத் திறந்துவைத்தார். தோழர் மு. கருணாநிதி திருவள்ளுவர் படிப்பகத்தைத் திறந்துவைத்து, படிப்பகத்தின் அவசியம் குறித்து விளக்கினார்.

பகல் 2 மணிக்கு கீரம்பூர் ஊராட்சி மன்றத் தலைவர் கோதண்டம் தலைமையில் வரவேற்பு அளிக்கப்பட்டு, ஊராட்சி மன்றச் சார்பில் வரவேற்பிதழும் வாசித்தளிக்கப்பட்டது. ஊர் பிரமுகர்களும், மற்றும் ஏராளமான பொதுமக்களும் கலந்துகொண்டு கூட்டத்தைச் சிறப்பித்தனர்.

துறையூரில் அம்பேத்கார் மன்றத் திறப்பு விழா

8—12—56 மாலை 5 மணிக்கு, துறையூர் தி. மு கழகக் கட்டிடத்திலிருந்து தோழர் மு. கருணாநிதி ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். தாழ்த்தப்பட்டோர் பகுதியில், டாக்டர் அம்பேத்கார் மன்றத் திறப்பு விழா, தோழர் து. ப அழகமுத்து தலைமையில் நடைபெற்றது. தோழர் மு. கருணாநிதி, டாக்டர் அம்பேத்கார் படத்தைத் திறந்துவைத்து அவரது நாட்டுப் பணிகளை விளக்கி, அவரது மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், தாழ்த்தப்பட்ட மக்களுக்காக தி. மு கழகம் செய்துவரும் பணிகளை விளக்கியும் சொற்பொழிவாற்றினார்.

அன்று இரவு 7½ மணியளவில், அரண்மனை பிள்ளையார் கோவில் திடலில் தோழர் அ. சித்தி தலைமையில் நடைபெற்றப் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் அம்பில் தருமலிங்கம், எம். எஸ் மணி, து. ப. அழகமுத்து ஆகியோர் சிறிது நேரம் பேசின பின், தோழர் மு. கருணாநிதி, பொறுப்பற்ற முறையில் காங்கிரஸ் சர்க்கார் நடந்து வருவதை எடுத்துக் காட்டியும், மக்கள் வரிப்பணத்தை வீணாக்குவதைக் கண்டித்தும் சொற்பொழிவாற்றினார்.

தோழர்கள் மு. கருணாநிதி, அம்பில் தருமலிங்கம் ஆகியோருக்கு ஏராளமாகக் கைத்தறி ஆடைகள், மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

கூட்ட இறுதியில் சில அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நாயன இசை மன்னருக்கு நினைவுச் சின்னம்!

கோவில்பட்டி, டிச 25—

நாயன இசை உலகில் மன்னர் மன்னராக விளங்கி இயற்கை எய்திய டி. என். இராசரத்தினம் அவர்களின் நினைவுக்கு அறிகுறியாக, சென்னையில், நாதசுர வடிவில் சின்னமொன்று எழுப்பப்படும் என்றும், அவருடைய குடும்பத்திற்கு ரூ. 1 இலட்சம் நிதி உதவியளிப்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும் காரக்குறிச்சி அருணாசலம் அவர்கள் அறிவித்துள்ளார்

நடிகர் சங்க அனுதாபம்

"தமிழகத்தின் தனிப்பெரும் கலைச்செல்வரும், நாதசுர இசைப் பெரும் புலவரும், இசையுலக மேதையுமான திரு. டி. என். இராசரத்தினம் பிள்ளை அவர்களது திடீர் மறைவு குறித்துத் தென் இந்திய நடிகர் சங்கம் ஆழ்ந்த துயரம் கொள்கிறது. அவரது பிரிவு கலையுலகில் ஏற்பட்டுள்ள ஈடு செய்யமுடியாத இழப்பாகும். அவரது பிரிவால் வருந்தும் அன்னார் குடும்பத்தார், உற்றார் உறவினர் அனைவருக்கும் நடிகர்கள் சார்பில், தென்னிந்திய நடிகர் சங்கம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது"

என்று, கடந்த 14-ந் தேதி சென்னை—மயிலை தென்னிந்திய நடிகர் சங்கத்தில் நடைபெற்ற சங்கச் செயற்குழுக் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

கரூரில் தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிப்புப் பொதுக்கூட்டம்

ஈ. வெ. கி. சம்பத்திடம் ரூ. 1,556 தரப்பட்டது

கரூர், டிச 26—

கடந்த 18-ந் தேதியன்று மாலை 7 மணிக்கு இவ்வூர் மோட்டார் நிலையத்திற்கருகிலுள்ள மைதானத்தில், திரு. இரா. வைரப்பெருமான் தலைமையில் தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிப்பு விழாக் கூட்டம் நடைபெற்றது

தோழர் எம். கே. கரிகாலன் சிறிது நேரம் பேசினபின், திரு. என். ஆர். இராமசாமி தேர்தல் நிதி அளித்து உதவிய பொது மக்கள், தொழிலாளர்கள், மாணவர்கள் ஆகிய அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டு, தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களிடம் தேர்தல் நிதியாக ரூ 1,556 கொடுத்தார்.

இறுதியில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், தேர்தல் நிதி அளித்த அனைவருக்கும் நன்றி கூறிக்கொண்டு, காங்கிரஸ் சர்க்கார் திட்டங்களின் அவலநிலை குறித்தும், என். ஜி. ஓ.-க்கள் நிலை குறித்தும் சொற்பொழிவாற்றினார்.

தோழர் எம். கே. கரிகாலன் நன்றி கூறும்போது, மேற்கொண்டும் தேர்தல் நிதியாக ரூ 1,500 தருவதாக வாக்களித்தார்.

அன்று இரவு 10 மணிக்கு மக்கள் உணவு விடுதி உரிமையாளர் திரு. பி. கந்தசாமி அவர்களது விடுதியில் தோழர் சம்பத் அவர்களும் மற்றும் கழகத் தோழர்களுக்கும் சிறந்த விருந்து நடைபெற்றது. தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களுடன் தேர்தல்நிதிக் குழு உறுப்பினர்கள் அமர்ந்து புகைப்படம் பிடித்தனர்.

இரவு 11 மணிக்கு, கரூர் தொகுதி தி. மு. கழகத் தோழர் களடங்கிய ஆலோசனைக் கூட்டம் தோழர் பி. செட்டு இல்லத்தில் நடைபெற்றது. தேர்தல் குறித்துத் தோழர் ஈ வெ கி. சம்பத் கழகத் தோழர்களுக்கு அரிய ஆலோசனைகள் பல வழங்கினார்.

★

சத்திரப்பட்டியில் தி. மு. கழகத் தேர்தல் நிதி வசூல் ஊர்வலம்

15—12—56 காலை 6 மணிக்கு அதிர்வேட்டுகள் முழக்கப்பட்டன. அன்று காலை 10 மணிக்கு, மேள வாத்தியங்களுடன், உதயசூரியன் சின்னத்துடன், ஏராளமான கழகத் தோழர்கள் சமுசிகாபுரம், சங்கரபாண்டியபுரம், சத்திரப்பட்டி ஆகிய ஊர்கள் வழியாக ஊர்வலம் வந்தனர்.

மாலை 4 மணிக்கு, மீண்டும் பொன்னுசாமி நினைவு உடற்பயிற்சிக் கழகத் தோழர்கள் புலி வேடமணிந்தும், சிலம்பு விளையாட்டுக்களுடனும் ஊர்வலம் வந்து, உண்டியல் மூலம் ரூ. 7—7—0 தேர்தல் நிதிக்கு வசூலித்தனர். வேடமணிந்தும், சிலம்பு விளையாடியும் ஊர்வலத்தில் கலந்துகொண்டோருக்கு நூல் சிட்டங்களும், தேநீர், சிற்றுண்டிகளும் பல நெசவாளர்கள் அளித்தனர்.

★

திருமங்கலத்தில் தி. மு. கழகத் தேர்தல் நிதி வசூல் ஊர்வலம்

16—12—56 காலை 10 மணிக்கு தோழர் இசாக் தலைமையில் தோழர்கள் க. ம. ந. நடராசன், பொன்னுலிங்கம், பழனி, அண்ணாமலை, முருகேசன், மைதீன் மற்றும் பலர், படிப்பகத்திலிருந்து புறப்பட்டு, வீடு வீடாகச் சென்று, அரிசி, நெல், சோளம் முதலிய தானியங்களும், உண்டியலில் பணமும் திரட்டினர்.

நிதி வசூலுக்குச் சென்ற தோழர்களுடைய தலையில் கூடையும் சாக்கும் இருப்பதைக் கண்டு, தாய்மார்கள் கூப்பிட்டுக் கூப்பிட்டு அரிசி, மற்றும் தானியங்கள் வழங்கிய காட்சி, மிக நம்பிக்கையூட்டுவதாக அமைந்திருந்தது.

★

திருத்தம்

21—12—56 'நம் நாடு' இதழ் முதல் பக்கத்தில், சென்னை பேப்பியர் பார்க்கில் நடைபெற்ற சிம்சன் குரூப் கம்பெனித் தொழிலாளர் தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிப்புக் கூட்டச் செய்தியில், '25-வது வட்ட கலைஞர் மன்றச் சார்பில் மலர்மாலை அணிவிக்கப்பட்டது' என்றிருப்பதை '29-வது வட்டம் சிந்தாதிரிப்பேட்டை கலைஞர் மன்றச் சார்பில்' என்று திருத்திப் படித்துக் கொள்ளவும்.

அம்பேத்கார் மறைவுக்கு அஞ்சலி

தமிழகத்தில் அனுதாபக் கூட்டங்கள்

டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் அவர்கள் இயற்கையுற்றமை குறித்து, தமிழ் நாட்டில் பல இடங்களில் அனுதாபக் கூட்டங்கள் நடைபெற்று, உறவினருக்கும் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது. அந்நிகழ்ச்சிகளனைத்தும் சுருக்கித் தரப்பட்டுள்ளன :—

செங்கற்பட்டு :

16-12-56 மாலை 6 மணிக்கு செங்கற்பட்டு தர்க்கா மைதானத்தில், செங்கற்பட்டு மாவட்ட தாழ்த்தப்பட்டோர் சம்மேளனச் சார்பில், திரு. கே. சின்னக்குழந்தை தலைமையில் டாக்டர் அம்பேத்கார் மறைவு குறித்து அனுதாபப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. டாக்டர் அம்பேத்கார் அவர்களின் உருவப்படம் அழகுற அலங்கரிக்கப்பட்டுவைக்கப்பட்டது

தோழர் என். ஜீவரத்தினம் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் அரிய சேவையை விளக்கிப் பேசினார்.

பம்பாய்—தாராவி :

16-12-56 மாலை, பம்பாய்—தாராவி சொற்பயிற்சி மன்றத்தில் தோழர் பி. பி. முத்தையா தலைமையில் இரங்கற்கூட்டம் நடைபெற்றது. டாக்டர் அம்பேத்கார் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்ட பின்னர், தோழர்கள் பி. பி. பெருமாள், ஐ ஜேம்ஸ் இரத்தினம், ஏ இராசாமணி, க. இராசையா, என். பி. கமலசேகரன் ஆகியோர் டாக்டர் அம்பேத்கார் ஆற்றின தொண்டு குறித்துப் பேசினர்.

பம்பாய்—தோல் பதனிடும் தொழிலாளர் சங்கம்:

16-12-56ல் பம்பாய் தாராவியில், மேற்படி சங்கச் சார்பில் திரு. எம். பி. துரைசாமி தலைமையில் அனுதாபக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் மு. அருணாசலம், ந. கார்த்திகைரத்தினம், எம். எம். ஜோசப், ந. சிவபாண்டியன் ஆகியோர் அம்பேத்காரின் சிறப்பியல்புகளை விவரித்துப் பேசினர். இறுதியில் அனைவரும் எழுந்து நின்று அவரது மறைவு குறித்து அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப் பட்டது.

திருச்செங்கோடு:

8—12—56 மாலை 4 மணிக்கு, திருச்செங்கோடு புலிகார் ஆலைத் தொழிலாளர்கள், மற்றும் பொது மக்களும் திரு. என். மாரிமுத்து தலைமையில் மௌன ஊர்வலமாக வந்து, 40 கால் மண்டபத்தில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். அக்கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துத் தோழர்கள் பலர் பேசினர்.

ஆம்பூர் :

7—12—56 காலை 8 மணிக்கு, ஆம்பூர் கஸ்பா அம்பேத்கார் மைதானத்திலிருந்து ஆர். இராமசாமி தலைமையில், கருப்புக் கொடிகளுடன் மௌன ஊர்வலம் நடைபெற்றது. ஊர்வலம் பாலாறு திடலை அடைந்ததும், தோழர் கே. எம். சாமி தலைமையில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் தோழர்கள் பலர் பேசினர்.

சென்னை :

8—12—56 மாலை 6 மணிக்கு, சென்னை புதுமனைநகரம் தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகத்தில் தோழர் வி. முருகையன் தலைமையில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில், அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

வள்ளுவர் மன்றம்

சென்னை - ஓட்டேரி வாழைமா நகர் வள்ளுவர் மன்றச் சார்பில் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

இளைஞர் மறுமலர்ச்சி மன்றம்

8—12—56 இரவு 9 மணிக்கு, சென்னை-நுங்கம்பாக்கம் இளைஞர் மறுமலர்ச்சி மன்றச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது, அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப் பட்டது.

தாராவி :

தாராவி தெ இ ஆ தி மகாஜன சங்கச் சார்பில் தோழர் எம் என். மோசஸ் தலைமையில் நடைபெற்ற சர்வ கட்சி அனுதாபப் பொதுக்கூட்டத்தில் தி மு கழகம், தி. கழகம், கம்யூனிஸ்டுக் கட்சி, தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம், சமூக நல சேவா சங்கம் ஆகிய அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். தாராவி தி. மு. கழகச் செயலாளர் தோழர் த. மு. பொற்கோ பேசுகையில் 'அம்பேத்காரின் இழப்பு பகுத்தறிவு இயக்கத்திற்கு ஏற்பட்ட ஈடிணையற்ற இழப்பாகும்' என்று குறிப்பிட்டார்.

• • •

7—12—56 இரவு 7½ மணிக்கு. பம்பாய் தாராவி ராஜ பலி சால் எண். 2 உணவு விடுதியில் திருவள்ளுவர் சொற்பயிற்சி மன்றச் சார்பில் டாக்டர் அம்பேத்கார் மறைவு குறித்துத் தோழர் என். எம் சண்முகம் தலைமையில் இரங்கற் கூட்டம் நடைபெற்றது தோழர்கள் பலர் பேசினர் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

குளித்தலை :

குளித்தலை கடம்பர்கோவில் 'தமிழ்க்காசு' நூல் நிலையத்தில் தோழர் மீ. சு இளமுருகு பொற்செல்வி தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

பம்பாய் :

9—12—56ல் பம்பாய் சிவாஜி பார்க் கடற்கரையில் சுமார் 5-இலட்சம் மக்கள் அடங்கிய சர்வ கட்சி அனுதாபப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. திருமதி அம்பேத்கார், அவரது மகன், மற்றும் அவர் உறவினர்களும் சுடுகாட்டிற்கு வந்திருந்த அம்பேத்கார் அவர்களது சாம்பலை மண்பாத்திரம் ஒன்றில் வைத்து, திரண்டிருந்த மக்கள் பின்தொடர இல்லம் வந்தனர்

கூட்டத்தில், அம்பேத்கார் அவர்களின் நாட்டுச் சேவைகளை விளக்கியும், இன்னல்களூடே இளம் வயதிலிருந்து தம் இனத்தவர்களுக்குச்

வாணியம்பாடி :

9—12—56 காலை 8 மணிக்கு, வாணியம்பாடி கோணாமேடு அம்பேத்கார் கழகத்திலிருந்து, ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லாமல் கருப்புச் சின்னம் அணிந்து தோழர் எம். ஜெகநாதன் தலைமையில் மௌன ஊர்வலம் வந்தனர். பகல் 1-மணிக்குக் காமராசபுரத்தில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். வாணியம்பாடி தோல் பதனிடும் தொழிலாளர் சங்கச் சார்பிலும் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

மாடக்குளம் :

9—12—56 இரவு 8 மணிக்கு, மதுரை மாவட்டம் மாடக்குளம் அண்ணா மைதானத்தில் முத்து இளைஞர் படிப்பகத்தின் சார்பில் தோழர் பெரியகருப்பன் தலைமையில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில், அனைவரும் ஒரு நிமிட நேரம் மௌனமாக இருந்து அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

இராணிப்பேட்டை :

7—12—56 காலை 8 மணிக்கு சர்வகட்சியினர் சார்பில் மௌன ஊர்வலம் நடைபெற்றது. பஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள மைதானத்தில் தோழர் ஏ. செயராமன் தலைமையில் நடைபெற்ற அனுதாபப் பொதுக்கூட்டத்தில் சர்வகட்சித் தோழர்களும் அனுதாபம் தெரிவித்துச்சொற்பொழிவாற்றினர். தி மு. கழகச் சார்பில், தோழர் எஸ். வி சங்கரன் கலந்துகொண்டார்.

இராணிப்பேட்டை தி. மு. கழக இல்லத்தில் பறந்துகொண்டிருந்த கழகக் கொடி தாழப் பறக்கவிடப் பட்டது.

காரை :

7—12—56 மாலை 6 மணிக்கு இராணிப்பேட்டையை அடுத்த காரையில், தி. மு. கழகம், தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் ஆகியவை சார்பில் தோழர் ஏ. செயராமன் தலைமையில் நடைபெற்ற அனுதாபப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் பலர் இரங்கலுரையாற்றினர்.

காரையிலும் கழகக் கொடி தாழப் பறக்கவிடப்பட்டது.

சென்னை சமூகஊழியர் மன்றம்

9—12—56-ல் நடைபெற்ற சென்னை வைகுண்டபுரம், காமராசபுரம் சமூக ஊழியர் மன்றக் கூட்டத்தில் மன்ற நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். டாக்டர் அம்பேத்கார் மறைவு குறித்து அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

சேலத்தில் பொதுக்கூட்டம்

அண்ணா பொதுச்செயலாளர்

மற்றும் தலைவர்கள் கலந்து கொள்வர்.

★

30-12-56 மாலை 6 மணிக்கு சேலம் 'வி' மார்க்கெட் மைதானத்தில் கே. வி. கே. சாமி மேடையில், மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறும்.

தோழர் ஜி. பி. சோமசுந்தரம் தலைமைவகிப்பார்.

அண்ணா, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், மற்றும் தலைவர்கள் சொற்பொழிவாற்றுவர்.

அக்கூட்டத்தில், தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிக்கப்படும்.

நகரத்தில் அதிக உறுப்பினர்கள் சேர்த்த கிளைக் கழகங்களுக்கு பொதுச்செயலாளர் அவர்களால் வெள்ளிக் கோப்பை பரிசு வழங்கப்படும்.

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

கோபி வருகை

31-12-56 மாலை 7 மணிக்கு, கோபி பெரியார் மைதானத்தில் கோபி நகர தி. மு. கழகச் சார்பில் நடைபெறும் தேர்தல் நிதிஅளிப்புப் பொதுக்கூட்டத்தில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களிடம் நிதி வழங்கப்படும்.

தேர்தல் நிதி உதவுவோர் எஸ். எம். ஷரீப் என் 10; மெயின்ரோடு, கோபி—என்ற முகவரிக்குக் கொடுக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தேர்தல் நிதி தாரீர்!

		ரூ. அ. பை
வரவு :		
முன் (26—12—56)இ தழ்ப்படி		34,152—15—10

24—12—56 அன்று, சென்னை—பெத்துநாய்க்கன் பேட்டையில் துணைப் பொதுச்செயலாளர் என். வி. என்., தோழர் கண்ணதாசன் ஆகியோர் கலந்துகொண்ட திருவள்ளுவர் முத்தமிழ்க் கழக ஆண்டு விழாவில் அளித்த நிதி ரூ 92—10—0 விவரம் வருமாறு :—

8-வது வட்டத் தி. மு. கழகம்	60	0	0
திருவள்ளுவர் முத்தமிழ்க் கழகம்	30	10	0
எம். ஈ. ஏ. அசோசியேஷன்	2	0	0

26—12—56 அன்று, அண்ணா, என். வி. என். கலந்துகொண்ட சென்னை 37-வது வட்டம் (இராயப்பேட்டை) தி. மு. கழக ஆண்டு விழாவில் அளித்த நிதி ரூ. 294—2—3 விவரம் :

37-வது வட்டத் தி. மு. கழகம்	162	0	0
பெண்கள் படிப்பகம்	114	8	0
திருவட்டீசுவரன்பேட்டை ஆதரவாளர்கள்	14	10	3
ஆமதாபாத் தி. மு. கழக உறுப்பினர் வேலாயுதம்	3	0	0
இராமச்சந்திரபுரம் தி. மு. கழகம் (இராமநாதபுரம் மாவட்டம்)	15	0	0
அருப்புக்கோட்டை கே. வி. கே. சாமி நினைவுப் படிப்பகம்	6	4	0
தேவதானப்பட்டி தி. மு. கழகம்	2	0	0
சே. செம்ராசு, சிங்கம்புணரி	4	0	0
ஆலங்குடி தி. மு. கழகம் (புதுக்கோட்டை)	25	0	0
வி. பொன்னுசாமி, நொச்சியூர் (தஞ்சை மாவட்டம்)	7	8	0
பே. ஆறுமுகம், பழைய உதகை நீலகிரி	10	0	0
எம். எஸ். மணி, உடுமலைப்பேட்டை	12	0	0
சேலம் கூட்டத்தில் தோழர் கி. மனோகரன் மூலம்	41	0	0
திராவிடச் செல்வி, மவுண்ட்ரோடு சென்னை-2	2	0	0
காட்டுப்பாடி (வ. ஆ.) தி. மு. கழகம்— 'இரத்தக்கண்ணீர்' திரைப்படக் காட்சிமூலம்	201	0	0
பணிக்கம்பட்டி (திருச்சி) தி. மு. கழகக் கட்டிடத் திறப்பு விழாவில் அண்ணா அவர்கள் மூலம்	55	0	0
புதுப்பாளையம் (புதுவை), தி. மு. கழகம்	11	0	0
காரைக்குடியில் ஆய்வுக் குழுவின் வருகையின் போது வசூலித்தது—(தோழர் அறிவுடைநம்பி மூலம்)	56	10	0
தேவகோட்டை தி. மு. கழகம்	50	0	0

ஆக மொத்தம் ரூ. 35,038—2—1

குறிப்பு :—நிதி அனுப்பி வைக்கவேண்டிய முகவரி :— பொதுச்செயலாளர்—தி. மு. கழகம் 'அறிவகம்', இராயபுரம், சென்னை-13

பார்க்பேர் பொருட்காட்சி : 56-57

சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்

29—12—56 சனி பகல் 2 மணிக்கு

விளையாட்டுப் பகுதித் திறப்பாளர் : சென்னை கவர்னர் அவர்கள்

ரேக்ளா, சைக்கிள், ரிக்ஷா ஓட்டப்பந்தயங்களும் சர்க்கஸ், தந்திரக்காட்சி, பம்பாய்நடனம், ஓவியக்கலை—இன்னும் பல

★

சகுந்தலா கலை அரங்கில்—மாலை 6-மணிக்கு

சகுந்தலஜூபிலி விலாச சபா அளிக்கும்

'தங்கை' தமிழ் சமூக நாடகம்

எம். எஸ். மோகன்—காண்டிராக்டர்

அண்ணா

என். வி. நடராசன்

★

சுற்றுப்பயண நிகழ்ச்சி:

டிசம்பர்

29 : காலை—தர்மபுரி- சிறப்புக் கூட்டம்;

பிற்பகல் 2 மணி — சேலம்-மத்திய செயற் குழுக் கூட்டம் ;

மாலை 5 மணி—அரூர் நகராண்மைக் கழக வரவேற்பு ;

இரவு 7 மணி—அரூர் தி. மு. கழக நிதி அளிப்புக் கூட்டம் ;

30 : காலை 8-30 மணி— சேலம் -அம்மாப்பேட்டைத் தி. மு. கழகக் கட்டிடம் (இருளப்பன் நினைவு நிலையம்) திறப்பு விழா ;

காலை 10மணி—பொதுக் குழுக் கூட்டம்;

மாலை 6 மணி—பொதுக் கூட்டம்;

31 : மாலை 6 மணி—பொறையார் நிதி அளிப்புக் கூட்டம் ;

ஜனவரி

1 : மாலை—குளித்தலை நிதி அளிப்புக் கூட்டம் ;

2 : காலை 10 மணி-திருப்பூர் நிதிஅளிப்புக் கூட்டம்

காரைக்கால் தி. மு. கழகப் பொது உறுப்பினர்களுக்கு :

30-12-56 மாலை 3 மணிக்கு பொறையாற்று வீதி பொன்னு மின்னச்சகம் தோழர் துரைசாமி இல்லத்தில் காரைக்கால் நகர தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். தேர்தல் நிதி அளிப்பு விழா குறித்து ஆலோசிக்கப்படும்.

சென்னை 2-வதுவட்ட தி. மு. க. செயற்குழு உறுப்பினர்களுக்கு :

29-12-56 மாலை 6½-மணிக்கு, 2-வதுவட்டக் கிளைக் கழகப் பணிமனையில் (எண் 100, மன்னார் சாமி கோவில் தெரு) கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். கழக வரவு-செலவுகள் பரிசீலனை செய்யப்படும்.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

30-12-56 காலை 10 மணிக்கு சென்னை இராயபுரம் கே. வி. கே. சாமி நினைவு மன்றத்தில் தோழர் மயிலை முத்தெழிலன் தலைமையில், 'ஏன்?' எனும் தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

• • •

29—12—56 மாலை 6-மணிக்கு, சென்னை-அண்ணே கே. எஸ். பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பகத்தில் தோழர் எஸ். ஏ. எழில் மதியன் தலைமையில் 'தேர்தலும் தி. மு. கழகமும்' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

தம்மம்பட்டி துப்பாக்கிப் பிரயோகம்

நீதிமன்றத் தீர்ப்பை ஒட்டி போலீஸ் அதிகாரிகள்மீது நடவடிக்கை

எம். பி. சுப்பிரமணியம் கோரிக்கைக்கு மந்திரி பதில்

சென்னை, டிச. 27—

துப்பாக்கிப் பிரயோகத்திற்கு அவசியமே இருக்கவில்லை என்ற கருத்துப்பட ஆத்தூர் நீதிபதி வழங்கிய தீர்ப்புக்கு ஒப்ப, தோழர் எம் பி. சுப்பிரமணியம் எம் எல்.ஏ அவர்கள் தம்மம்பட்டியில் கடந்த பிப். 20-ந் தேதி நடைபெற்ற அர்த்தாலின் போது துப்பாக்கிப் பிரயோகம் செய்த அதிகாரிகளின் மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென சர்க்காரைக் கேட்டிருந்தார்.

இதை ஒட்டி எழுந்த கேள்வி ஒன்றுக்கு சட்டசபையில் பதிலளிக்கையில், நிதி மந்திரி சுப்பிரமணியம், 'விசாரணை நடத்தி, எவர் குற்றவாளிகளோ, அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்,' என்பதாகக் கூறியிருக்கிறார்.

சேலம் 22-வது வட்ட தி. மு. க. கிளை திறப்பு விழா

30-12-56 காலை 8½ மணிக்கு, சேலம் 22-வது வட்டம் அம்மாப்பேட்டை தி. மு. கழகக் கிளை திறப்பு விழா வையாபுரி உடையார் தெருவில் தோழர் எம் முருகேசன் தலைமையில் நடைபெறும். கழகக் கட்டிடத்தை அண்ணா திறந்துவைப்பார்.

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் கழகக் கொடியேற்றுவிப்பார்.

ஆரணி அண்ணா நாடக மன்றம்

29-12-56 இரவு 7-மணியளவில் பொன்னேரி வட்டம் ஆரணி பெருமாள் கோவிலருகில், அண்ணா நாடக மன்றக் கூட்டம் தோழர் சா. புதுமைப்பித்தன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் கோ. வெற்றிவீரன், கா. மு. உமர், இரத்தினகுமார், கா. செமொறன் ஆகியோர் பேசுவர்.

தமிழ் ஆட்சி மொழி......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

துறைகளிலும் தமிழ் படிப்படியாக இடம் பெற்று, ஒரு குறிப்பிட்ட காலத்தில் சர்வாகம் முழுவதும் தமிழ் மொழியிலேயே நடைபெற வதற்கு மசோதா வழி செய்கிறது.

பலரும் தங்கள் கருத்தை அறிவித்த பின், விவாதத்திற்குப் பதிலளித்த நிதி மந்திரி, தமிழ் மொழியின் சிறப்புக்களை எடுத்துக் கூறி, அது ஆட்சி மொழியாக விளங்குவதற்குரிய ஆற்றலைப் பெற்றிருக்கிறது என்பதையும் விளக்கியுள்ளார்.

விவாதஇறுதியில் அவர் 'வாழ்க தமிழ்' என்று முழக்கமிட்டு, பலரையும் ஆச்சரியத்தில் அமிழ்த்தியிருக்கிறார்.

சபைத் தலைவர்

சபைக்குத் தலைமை தாங்கிய உதவித் தலைவர் திரு. பக்தவத்சல நாயுடு அவர்கள், இன்று சபையின் நடவடிக்கைகளை தமிழில் நடத்தினார்.

504 பேர் கைது!

தொடர்ந்து சென்னை சட்டசபை முன் நடைபெற்றுவரும் பீடித் தொழிலாளர்களின் போராட்டத்தில் நேற்று நான்கு பிரிவுகளாகச்சென்ற 110 பேர் கைது செய்யப்பட்டனர்.

இத்தப் போராட்டத்தை யொட்டி இதுவரையில் 504 பேர் கைதாகியுள்ளனர்.

சென்னை, டிச. 26—

நாடகச் சட்டத்தை அமுல் நடத்துவதற்கு அறிவுரை கொண்ட ஆலோசனைக் குழு ஒன்றை சென்னை அரசாங்கம் நியமித்திருக்கிறது.

ஹங்கேரி மந்திரி சபையில் மாறுதல் ?

மற்றக் கட்சியினரும் இடம் பெற வாய்ப்பு கிடைக்கும் ?

புடாபெஸ்ட், டிச. 26—

ஹங்கேரி கம்யூனிஸ்டு மந்திரி சபையில், கம்யூனிஸ்டுகளல்லாதவர்களையும் சேர்த்துக்கொள்ளுவதற்கான முதல்நடவடிக்கை அடுத்த சில தினங்களில் உருவாகுமெனத் தெரிகிறது. பிரதமர் ஜானோஸ் காதர் தம் மந்திரி சபையில மற்றக் கட்சிகளின் பிரதிநிதிகளையும் சேர்த்துக்கொண்டு, அமைச்சரவையைப் பரவலாக்கப்போவதாக முன்னமே வாக்குறுதியளித்திருந்தார்.

சிறிய விவசாயிகள் கட்சியினர், குடியானவர்கள், சமூக ஜனநாயகவாதிகள் ஆகிய மூன்று பிரிவினரே கம்யூனிஸ்டல்லாத முக்கிய கட்சியினராகும்; இம்ரே நகியும், அவரது ஆதரவாளர்களும் ஒழிக்கப்பட்ட பின்னர் இக்கட்சி பகிரங்கமாக இயங்கவில்லை.

இந்தக் கொள்கை மாற்றம், விரிவாக அமைவதற்கு அடிப்படையாக இருக்குமென்று அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இலங்கையின் அபிவிருத்திக் குழு இந்திய அபிவிருத்திக் குழுவைச் சந்தித்துப் பேசியதனால் இலங்கைக்கு நன்மை ஏற்பட்டுள்ளதாம்.

தி. மு. க. தேர்தல் நிதி நாடகங்கள்

அண்ணா அவர்களும் ... கழகத் தோழர்களும் நடிக்கும்

சந்திரோதயம்

★

ஜன. 3: கோவை நகர்	ஜன. 17: போளூர் வ. ஆ.
,, 15: பூந்தமல்லி (செங்கற்பட்டு மாவட்டம்)	,, 18: சேலம் நகர்
	,, 19: திருச்சி நகர்
,, 16: காஞ்சிபுரம்	,, 20: மதுரை நகர்

★

மேற்கண்ட தி. மு. க. கிளைகளின் நிர்வாகிகள், நாடக ஏற்பாட்டினைச் சிறப்புற நடத்திக் கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் முயற்சி இனிது நிறைவேற அனைவரும் பேராதரவு தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.